111—

உள் விளையாட்டு அரங்கம்

***5338—திரு. அ.செ. வில்வநாதன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் நகராட்சி, 4–வது வார்டு, A. கஸ்பா பகுதியில் இறகுப் பந்து உள் விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் சட்டமன்றத் தொகுதி, ஆம்பூர் நகராட்சி, 4–வது வார்டு, A. கஸ்பா பகுதியில் இறகுப் பந்து உள் விளையாட்டு அரங்கம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன் அவர்கள்.*

திரு. அ.செ. வில்வநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் கழகத் தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் துயில்கொண்டிருக்கும் திசையினை நோக்கி வணங்குகிறேன். நமது தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக மக்கள் முதல்வர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அவை முன்னவர், கழகப் பொதுச் செயலாளர், நீர்வளத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.*

2022 ஏப்ரல் 13]

திரு. அ.செ. வில்வநாதன்: *மாண்புமிகு சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அண்ணன் எங்கள் இதயநிதி திரு. உதயநிதி அவர்களையும் மற்றும் மாண்புமிகு அமைச்சர்களையும் வணங்குகிறேன்.*

ஆம்பூர் சட்டமன்றத் தொகுதியில் விளையாட்டு வீரர்கள் விளையாடுவதற்கு அரசுமூலம் இதுநாள் வரை விளையாட்டு அரங்கம் ஏதுமில்லை. நான் குறிப்பிட்ட A. கஸ்பா பகுதியில் 2021–2022 ஆம் ஆண்டைய மானியக் கோரிக்கை அறிவிப்பில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைப்படி மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்மூலம் அறிவித்த எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதற்கு முதற்கண் நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்குத் தொகுதி மக்கள் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கு இடமில்லாத காரணத்தால், வார்டு எண் 35–ல் பெத்லகேம் பகுதியில் ஆம்பூர் நகராட்சிக்குட்பட்ட வருவாய்த் துறைக்குச் சம்பந்தப்பட்ட சர்வே எண் 2/8–ல், சுமார் 4 ஏக்கர் தீர்வு ஏற்படாத தரிசு நிலம் உள்ளது. இந்த இடத்தைத் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் வந்து பார்வையிட்டு, இந்த இடம் விளையாட்டு வீரர்களுக்கான விளையாட்டு அரங்கம் மற்றும் பூங்கா அமைக்க ஏதுவாக உள்ளதெனத் தெரிவித்துள்ளார். எனவே, நமது கழகத் தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆட்சியில் இங்கு இறகுப் பந்து உள் விளையாட்டு அரங்கம் அமைத்துத் தர வேண்டுமெனத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் மாவட்டம், 2019 ஆம் ஆண்டு புதிதாகத் தொடங்கப்பட்ட மாவட்டமாகும். திருப்பத்தூர் மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோன்று, திருப்பத்தூர் மாவட்டம், ஏலகிரி மலைப் பகுதியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய துரித நடவடிக்கையால், ஓர் ஏக்கர் பரப்பளவிலே 4.7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய விளையாட்டு அரங்கம் அமைக்கின்ற பணிகள் நடைபெற்று*

வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற ஆம்பூர் நகராட்சி, 4–வது வார்டு, A. கஸ்பா பகுதியில் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான சரியான இடம் இல்லையென்கின்ற அடிப்படையில், வார்டு எண் 37–ல், பெத்லகேம் பகுதியிலே இடம் இருக்கிறது; அந்த இடத்திலே விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டுமெனக் கோரியிருக்கிறார். அந்த இடத்தை ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கனிவோடு பரிசீலிக்கப்பட்டு, மேற்கண்ட பகுதியில் இந்த ஆண்டே இறகுப் பந்து உள் விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன் அவர்கள். நன்றி சொல்லிவிடுங்கள்.

திரு. அ.செ. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்லி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன் அவர்கள்.

திரு. ரூபி ஆர். மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் விளையாட்டு கிராமம் கொண்டு வரப்பட்டது. சுமார் 300 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலம் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ரூபி ஆர். மனோகரன்: தற்போது அது பராமரிப்பின்றி முட்புதர்கள் நிறைந்து காணப்படுகின்றது. திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்ட இளைஞர்களின்

2022 ஏப்ரல் 13]

நலன் கருதி, கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட விளையாட்டு கிராமத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயல்பாட்டிற்குக் கொண்டு வருவார்களா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்ற பாளையங்கோட்டை ஒன்றியத்திலிருக்கின்ற, மாண்புமிகு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஐயா அவர்களால் உருவாக்கப்பட்ட அந்த விளையாட்டு கிராமத்தை, விரைவில் செயல்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கேயிருக்கின்ற மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால், அந்தப் பகுதிகளில் இருக்கின்ற நீச்சல் வீரர்கள் பயிற்சி பெறுகின்ற அளவில் ஒரு நீச்சல் குளமும் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.

டாக்டர் நா. எழிலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோபாலபுரம் முத்தமிழறிஞர் வாழ்ந்த பகுதி. அதுவொரு அரசியல் Epicentre. பல அரசியல் Boxing களங்கள் பார்த்த பகுதியாகும். அதனால், ஆயிரம் விளக்கு தொகுதியில், கோபாலபுரம் விளையாட்டரங்கத்திலுள்ள உள்ளரங்கத்தில் Boxing Training Academy–ம், Boxing Indoor Stadium–ம் அமைத்துக் கொடுக்குமாறு நான் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

[*2022 ஏப்ரல் 13*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வரலாற்றில் கோபாலபுரம் என்பது ஒட்டுமொத்த உலகமே உற்றுநோக்கிய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஐயா அவர்கள் வாழ்ந்த இடமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஐயா அவர்கள்தான் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்க்கை உயர்வதற்காக 80 ஆண்டுகளுக்கும் மேலான பொது வாழ்க்கையில், தமிழகத்தை வளர்ந்த மாநிலமாக மீட்டெடுத்துத் தந்தவர். அதுமட்டுமல்ல, தமிழக விளையாட்டுத் துறையையே உருவாக்கித் தந்தவர் மாண்புமிகு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஐயா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, செங்கல்பட்டு மாவட்டம், மேலகோட்டையூரில் கிட்டத்தட்ட 105 ஏக்கர் பரப்பளவில் இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு* Sports University*-ஐ உருவாக்கிக் கொடுத்ததும் மாண்புமிகு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஐயா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

ஆயிரம் விளக்கு தொகுதியின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்ற கோபாலபுரம் விளையாட்டரங்கில் இந்த ஆண்டே Boxing Training Academy *தொடங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 112, மாண்புமிகு உறுப்பினர் திரு.* K. *மாரிமுத்து, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

112—

சுற்றுலாத் தலம்

***2988—திரு. K. மாரிமுத்து:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை அலையாத்திக் காடு பகுதியை சுற்றுலாத் தலமாக மேம்படுத்த அரசு முன்வருமா?